Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -26 12-11-2003 புதன்கிழமை ஓசை 267

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் விடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை விடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

R.V. பந்தல் சேவை தர்மபுரம் (சி-8689) யாழ் சாலை, கிளிநொச்சி.

## தவளைத் தாக்குதல் நடவடிக்கை மூலமே கடற்புலிகளின் அடித்தளம் பலமடைந்தது

### வெற்றி விழா நிகழ்வில் கேணல் சூசை



(அலுவலக செய்தியாளர்)

தவளை நடவடிக்கை மூலம் நாம் ஐந்து நீருந்து விசைப் படகுகளையும் கைப்பற்றியதால் தான் இன்று கடற்புலிகள் மிகவும் பலம் வாய்ந்த ஒரு சக்தியாகத் திகழ்கின்றனர். கடற்புலிகளின் அடித்தளம் இந்த வெற்றித் தாக்குதலின் மூலம்தான் பலமானது என நேற்று பூநகரி வாடியடியில் நேற்று நடைபெற்ற பூநகரி கூட்டுப்படைத்தளம் வெற்றி கொள்ளப் பட்டதன் பத்தாமாண்டு நிறைவு விழாவில் கலந்து சிறப்புரை ஆற்றுகையில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பூநகரி மண்ணில் இருந்து சிங்களப் படைகள் விரட்டப்பட்டு இன்று பத்து ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டது. இந்த மண்ணைஎதிரியிடம் இருந்து மீட்பதற்காக எமது பெரும் தளபதிகள் நால்வர் உட்பட 429 போராளிகளை நாம் இழந்திருக்கின்றோம்.

இந்த பூநகரித் தளம் ஒரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி சந்திரிகாவின் அதிரடி நடவடிக்கைகள்

# சமாதானத்தில் ஏற்படுத்திய பாதிப்புகள் குறித்து நோர்வே குழுவிடம் த.தே.கூ. எடுத்துரைப்பு!

### பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களை மூன்றாம்தரப்பாக ஏற்றுக்கொள்ளமுடியாதெனவும் தெரிவிப்பு

**விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைத் திட்டம், சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களின் பங்கு, சனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கை சமாதான முயற்சிக்கு ஏற்படுத்தும் பாதிப்பு- இம்மூன்று விடயங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக்குழு நேற்றுக் காலை கொழும்பு நோர்வே தூதரகத்தில் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கேசன் தலைமையிலான குழுவினருடன் ஒரு மணி நேரப் பேச்சுவார்த்தையின்போது தனது நிலைப்பாட்டை வெளிப் படுத்தியது.**

கூட்டமைப்புத் தூதுக்குழுவிற்கு தலைமை வகித்துச் சென்ற கூட்டமைப்பு பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா. சம்பந்தன் இத்தகவலை வெளியிட்டார். விதார் ஹெல் கேசனுடன் சிறப்புப் பிரதிநிதி எரிக் சூல் ஹெய்ம், நோர்வேத் தூதர் ஜான் பீற்றர்சன், நோர்வே தூதரக அரசியல் செயலாளர் தோமஸ்ஹொக்லண்ட் ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றினர். கூட்டமைப்புத் தூதுக் குழுவில் இரா. சம்பந்தன், வீ. ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம், அ. விநாயக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தனித் தரப்பாக அனுமதித்தால் மட்டுமே சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு

### நோர்வே பிரதிநிதியிடம் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தரப்பாக எதிர்காலப் பேச்சுக் களில் கலந்துகொள்ள அனுமதிக் கப்பட்டால் மாத்திரமே சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கப் போவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸ் பங்குபற்றுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு நோர்வேக்கு இருக்கிறது என்று நேற்று பிற்பகல் அந்த நாட்டின் பிரதிநிதிகளைச் சந்தித்த போது கூறியுள்ளார்.

சகல தரப்பினருடனும் பேச்சுக் கள் நடத்திய பின்னர் தனிக் கட்சி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியுடன் பேச்சுக்குத்தயார் ஆனால் தேசிய அரசுபற்றியல்ல

### ஐ.தே.கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தம்முடன் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு அழைப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஏற்றுக் கொண்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இன்றுமுற்பகல் 11.30 மணியளவில் இருவரும் சந்திக்கவுள்ளனர். இச் சந்திப்பு சனாதிபதி மாளிகையில் இடம் பெறும்

நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு சனாதிபதி பிரதமருக்கு எழுத்துமூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார். இச் சந்திப்பில் குறித்த நடைமுறைபற்றி விரிவாக கலந்துரையாட எண்ணியுள்ளதாகவும் சனாதிபதி தெரிவித்திருந்தார். அரசாங்கத்துடன் இந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்கமுன் சமாதான முன்னெடுப்புக்கள் அவசியம்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

ஏனைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னர் சமாதான முன்னெடுப்புக்களைதளம்பலடையாது கொண்டு செல்ல வேண்டியது அவசியமானதாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நேற்று நடைபெற்ற பின்னர் அவர் கருத்துரைக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றில் எந்த ஒரு ஆட்சியும் சந்திக்காத பிரச்சினைக்கு முகங்கொடுத்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் பெற்ற மக்கள் பெரும்பான்மை வாக்குகளின் மத்தியில் மூன்று அமைச்சுப் பதவிகள் சனாதிபதியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உட்படுவதுடன் வெளிநாட்டு உதவிகளும் தாமதம

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாடு பிளவுபடக்கூடிய வகையிலேயே புலிகளின் இ.த. வரைவு அமைக்கப்பட்டுள்ளது

### பொ.ஐ.முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து விடுதலைப்புலிகள் சமர்ப்பித்திருக்கும் பிரேரணைகள் நாடுபிளவு பட அல்லது பிரிவினை ஏற்படவழிவகுக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருப்பதாக பொ.ஐ. முன்னணி தெரிவித்துள்ளது.

இதில் பல பிரோரணைகள் அரசியல் யாப்பை மீறுவதாக உள்ளன. எனினும் சமாதானப் பேச்சுகள் தொடர்ந்து இடம்பெறுவதையே பொ.ஐ.முன்னணி விரும்புகிறது. அரசியல் யாப்புத் திருத்தம் ஒன்றில் இடைக்கால நிர்வாக அமைப்பிற்கான பிரேரணைகள் உள்ளடக்கப்படுவதை பொ.ஐ.முன்னணி விரும்புகிறது.இடைக்கால ஆட்சிக்கான பேச்சு என்ற வகையில் கலந்துரையாடல்கள் மட்டுப்படுத்தப்படுவதை அதுவிரும்பவில்லை ஐ.தே.முன்னணி, பொ.ஐ. முன்னணி விசேடமாக சனாதிபதி, பிரதமர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் யுத்தமொன்று மூழுமானால் எதிர் கொள்ளும் சக்தி பொ.ஐ.முவுக்கு உண்டு

### பொ.ஐ.மு பா.உ றிச்சட் பத்திரன

(கொழும்பு)

யுத்தமொன்று மூழுமானால் அதனை எதிர்கொள்ளும் சக்தியை பொ.ஐ.முன்னணி கொண்டிருக்கிறது என பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் றிச்சட்பத்திரன தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளின் பிரேரணைகள் நாட்டை பிளவுபடுத்தும் அடுத்துவரும் நாட்கள் நாட்டிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும் சனாதிபதி மூன்று அமைச்சர்களின் பொறுப்புக்களையும் எடுத்துக் கொண்டதன் மூலம் நாடு பிளவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சிறு விளம்பரம்

Jeevasoft Systems ஊடாக PC- Assembling, PC- Upgrading, PC- Repair, Software Developing, Web Designing ஆகியன செய்து கொடுக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு: திரு. கா.ஜீவலிங்கம், C.C. பாடசாலை அருகே புதுக்குடியிருப்பு. (3725)

### வகுப்புக்கள் ஆரம்பம்

Advancer Computing Institution ஊடாக Hard Ware, Wep Design, Programming போன்ற நவீன வகுப்புகளுடன், கணினி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களும் 15-11-2003 ஆரம்பம். தொடர்புகட்கு: திரு. கா. ஜீவலிங்கம், C.C. பாடசாலை அருகே புதுக்குடியிருப்பு. (3726)

### தவறிவிட்டது

அன்ரன் ஜெரட்டினம் அன்ர னிற்றாசுதர்சினி 25.10.2003 அன்று புதுக்குடியிருப்புக்கும் புளியம் பொக்கனைக்கும் இடையில் I.C ஒன்று தவறிவிட்டது .I.C.இல. 778614278V கண்டு எடுத்தவர்கள் வே.சிவபாதம் இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அனுப்புமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறோம். (3730)

### தவறிவிட்டது

லோகேஸ்வரன் லோகநாதன் ஆகிய எனது தே.அ.அட்டை இல.(680500258v)சிவநகருக்கும் துர்க்காவீதி அமுதன் கல்வி நிலையத் திற்குமிடையில் 07.11.2003 வெள்ளிக்கிழமை. தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குமரன்ஸ் புத்தகசாலை அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (3731)

# பிற நாடுகளுக்குச் சென்று பின் மீளக்குடியேறிய வவுனியா மக்களுக்கு இடம்பெயர் சேவை

(செட்டிகுளம்)

போர் காரணமாக வவுனியா மாவட்டத்தில் இருந்து இந்தியா அல்லது பிறநாடுகளுக்குச் சென்று மீண்டும் வவுனியா மாவட்டத்திற்கு வந்துள்ளவர்களுக்குத் தேவையான சேவைகளினை செய்வதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையினை வவுனியா மாவட்ட அரச செயலக புனர்வாழ்வு கிளையும், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் காரியாலய வவுனியா கிளையும் இணைந்து நடத்தவுள்ளனர்.

- பதியப்படாத திருமணப் பதிவுகள்
- இந்தியாவிலோ அல்லது வேறு நாடுகளிலோ பிறந்த குழந்தைகளுக்கான இலங்கை பிறப்பு அத்தாட்சிப் பத்திரப்பதிவு.
- அடையாள அட்டைப் பதிவு.
- கடவுச் சீட்டுப் பதிவு.
- தேர்தல் இடாப்பு பதிவு.
- காணி, சொத்து சம்பந்தமான தீர்வு.
- உலர் உணவு விநியோகம்.
- ஒருங்கிணைந்த புனர்வாழ்வுத் திட்டத்திற்கான கொடுப்பனவுகள்.
- குழந்தைகள், பெரியவர்களுக்கான தடுப்பூசி ஆலோசனை
- சாரதி அனுமதிப்பத்திரம்ஆகியன,

வவுனியா மாவட்டத்தினைச் சேர்ந்த மக்களுக்காக நடத்தப்படும் சேவையினை 15ஆம் திகதி காலை 9.30-4.30 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் மேலதிக விபரங்கள் தேவைபாடின், அரச செயலகம், யூ. என். எச். சி. ஆர். காரியலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (21)

# பாம்புடன் நடனமாடுபவர் பாம்புக் கடிக்கு இலக்கானார்

(மல்லாவி)

பாம்புகளுடன் நடனமாடி வருபவர் பாம்பு தீண்டியதால் மல்லாவி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். பல்வேறு இடங்களிலும் இந் நிகழ்ச்சியை நடத்திவரும் யாழ். மானிப்பாய் வீதியைச் சேர்ந்த பரீட்நசீர் (வயது 45) என்பவர் துணுக்காய்ப் பகுதியில் பாம்புகளுடன் நடனமாடிய போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிறு அவர் புதிதாகப் பிடித்த நான்கு பாம்பு களுடன் நடனமாடிக் கொண் டிருந்த போது பாண்டியன்குளம் பகுதியில் இவரால் பிடிக்கப்பட்ட புள்ளி நாகம் என்னும் வகைப் பாம்பு இவரைத் தீண்டியது. எனினும் இவர் தொடர்ந்து நடனமாடிக் கொண்டிருந்ததால் உடலில் விசம் பரவியது. உடனடியாக இவர் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை இவரின் மகன் பரீஸ் சரன் (வயது 23)நேற்றுமுன்தினம் பாம்புகளின் மத்தியில் நடனமாடியமை குறிப்பிடத்தக்கது.(24)

# மெய்வல்லுநர் பயிற்றுநர் தேர்வில் தகைமைச் சித்தி பெற்றார்



கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப் பிள்ளை அன்ரன் அன்பழகன் சர்வதேச மெய்வல்லுநர் சங்கத்தின் தகைமைப் பெற்ற மெய்வல்லுநர் பயிற்றுநர் அனுமதிப் பத்திரப் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார். கடந்த மாதம் மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்திலும், கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கிலும் பயிற்சியின் பின்னான பரீட்சையிலேயே இவர் தேர்ச்சி பெற்றுள்ளார். அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 25 பேரில் 6 பேர் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட் டுள்ளனர். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த யாழ். நகர விளையாட்டு அதிகாரி செல்வராஜா ரமணன், மன்னார் புனித சவேரியார் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் பி. ஞானராஜ், வவுனியா கல்வி வலய உடற்கல்விக்கான சேவைக்கால ஆலோசகர் நவரட்ணம் அந்தராங்கன், மட்டக்களப்பு ஏறாவூர் விளையாட்டதிகாரி கணபதிப்பிள்ளை சுவர்ணச்சந்திரன், திருகோணமலை கிண்ணியா பிரதேச விளையாட்டு அதிகாரி முகமட் வாசித் ஆகியோரே வட-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தோராவார், இவர்கள் அனைவரும் தேர்ச்சியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியைச் சேர்ந்த அன்ரன் அன்பழகன் இவ்வருடம் நடைபெற்ற மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலருக்கான பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சி நெறியினை சர்வதேச மெய்வல்லுநர் சங்கத்தின் ஆசிய அபிவிருத்தி மையத்தின் பண்பாளர் திரு. ரியா, மலேசிய தேசிய மெய்வல்லுநர் பயிற்றுநர் கனியபானாசர் ஆகியோர் நடாத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 51பாகிஸ்தானியர் விடுவிப்பு

சிறிலங்கா ஊடாக கிரேக்கத்துக்கு பயணம் மேற்கொண்டபோது சிறிலங்காவில் கைது செய்யப்பட்ட51 பாகிஸ்தானியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். மூன்று மாதத்திற்கு முதல் கப்பலில் கிரீஸ் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டிருந்தபோதே கைதுசெய்யப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

# - காணாமல் போனவர் குறித்து - வன்னி இராணுவத் தளபதியை நீதிமன்றம் விசாரணைக்கு அழைப்பு

(வவுனியா- செட்டிகுளம்)

காணாமல் போனவர் தொடர்பான ஆள் கொணர்வு மனு விசாரணைக்கு வன்னி இராணுவத்தளபதியினை 24ஆம் திகதி ஆஜராகுமாறு வவுனியாமாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் கட்டளையிட்டுள்ளார்.

15/08/2000 காத்தார் சின்னக்குளம் பகுதியினைச் சேர்ந்த அரியதாஸ் விஜயகுமார் என்பவரை 21-1பிரிவு படைப்பிரிவினைச் சேர்ந்த இரண்டு இராணுவப் புலனாய்வு பிரிவினர் வெள்ளை வானில் வந்து கைதுசெய்து கொண்டு சென்றதாகவும் இன்று வரை இவருக்கு என்ன நடந்தது என்று தெரியாது என காணாமல் போனவரின் தாயார் புவனேஸ்வரி அரியதாஸ் என்பவர் மேன் முறை யீட்டு நீதிமன்றில் ஆள் கொணர்வு மனு தாக்கல் செய்தார்.

இதில் பிரதிவாதிகளான இராணுவத்தளபதி, சட்டமாஅதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். 141ஆவது பிரிவின் கீழ் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றால் வவுனியா மாவட்ட நீதிமன்றுக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. இதன் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்ட போது இராணுவ தரப்பில் ஆஜரான சட்டத்தரணி. இராணுவ சட்டஆலோசகரான, நலிந்த நல்ல பெரும, தனக்கும் இராணுவ தளபதி தொடர்பாக கதைக்கமுடியும் என்றும் எனினும் வன்னி இராணு வத்தளபதி தொடர்பாகக் கதைக்க அனுமதி இல்லை என்றும் கூறி னார். இதனை அடுத்தே வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் 24 ஆம் திகதி வன்னி பிரதிப் பொலிஸ் அதிபர் ஊடாக வன்னி இராணுவ தளபதியினை ஆஜராகுமாறு அழைப்பானை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள நபரான மரியநாயகமும் ஆஜராக வேண்டும் என்று நீதவான் குறிப்பிட்டுள்ளார்.

# தற்காலிகக் குடியேற்றலுக்கு அரியாலை மக்கள் ஆட்சேபம்

கிழக்கு அரியாலை, கொழும்புத்துறை போன்ற பிரதேசத்து பாதுகாப்புநடைமுறையால் அப்பகுதிகளில் மீளக்குடியமர முடியாது வாழ்ந்துவரும் சுமார் 100 குடும்பங்களை அரியாலை முள்ளிப் பகுதியில் உள்ள அரச காணிகளில் தற்காலிகமாக குடியமர்த்துவது என்ற நல்லூர் பிரதேச செயலகத்தின் நடவடிக் கைக்கு மக்கள் ஆட்சேபம் தெரி வித்துள்ளனர்.

படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள தம்சொந்த இடங்களில் குடிய மர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்படாத காணிகளில் அடிப்படைவசதிகள் அற்ற தற்காலிக குடிசைகளில் தம்மை குடியமர்த்துவதை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது என தெரிவித் திருப்பதுடன் எம்மை மீள் குடியமர வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இல்லாது போனால் தாம் வெகுசனப் போராட்டங்களில் ஈடுபடப்போவதாகவும் எச்சரித்துள்ளனர். (33)

# திருட்டைத் தடுக்க நடவடிக்கை

களவு போன துவிச்சக் கர வண்டிகளினை கண்டுபிடிக்கும் நடவடிக்கையினை வவுனியா பொலிசார் நேற்றுமாலை மேற் கொண்டனர்.

யாழ்ப்பாணவீதியில் 10இற்கு மேற்பட்ட பொலிசார் நின்று துவிச்சக்கர வண்டிகளின் இலக்கங்களையினையும்வைத்துவீதியால் சென்று வந்த அனைத்து துவிச்சக்கர வண்டிகளினையும் பரிசோதனை செய்துள்ளனர்.

வவுனியாவில் அண்மை நாட்களாக படுமோசமான முறையில் துவிச்சக்கர வண்டி திருட்டு சம்பவங்கள் அதிகரித்து இருப்பதாகவும் இது தொடர்பான முறைப்பாடுகள் பல கிடைத்தி இருப்பதாகவும் வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர். (24)

# கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் விவசாயக்கடன் வழங்கல்

கிராம அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் கிராம புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் சுய தொழில் முயற்சி மற்றும் விவசாயக்கடன் என்பன வழங்கபெறவுள்ளது.

கோணாவில் கிராமிய புனர் வாழ்வு அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் வைத்து கோணா வில், யூனியன்குளம், காந்திகிரா மத்தைச் சேர்ந்த 43 பயனாளிக ளுக்கு இன்று பி.ப.2.00 மணிக்கு மேற்படி கடன் வழங்கபெறவுள்ள தெனநிறுவனஇணைப்பாளர் சறஜினா தெரிவித்துள்ளார். (சோ)

# யாழ் இல். இராணுவத்தினரும் வீதிப் போக்குவரத்து கண்காணிப்பில்

வீதிப் போக்குவரவு கண்காணிப்பு பொலிசாருடன் இணைந்து இராணுவத்தினரும் போக்குவரவுக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர் என யாழ் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் போக்குவரவுக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் பொலிசார் செய்யும் போக்குவரவு கண்காணிப்பு நடவடிக்கையால் வாகன ஓட்டுனர் மற்றும் நடத்துனருக்கும் பொலிசாருக்கும் ஏற்பட்டுவரும் முறுகல்நிலையையும் கைகலப்பு உருவாகும் நிலையையும் தொடர்ந்து இவ்வாறு பொலிசாருடன் இணைந்து இராணுவத்தினர் பொலிசாரின் பாதுகாப்பிற்காக நிறுத்தப்படுவர் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (33)

# கட்சித்தலைவர்கள் கூட்டம் நடத்த சபாநாயகருக்கு அதிகாரமில்லை

## ஜே.வி.பி. கூறுகின்றது.

சனாதிபதியினால் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டநிலையில் சபாநாயகருக்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்துவதற்கு அதிகாரம் எதுவும் கிடையாது என வும் அவர்கள் கூறியுள்ளனர். இது அரசியலமைப்புக்கு முரணான நடவடிக்கை எனவும் தாம் அதில் பங்கு கொள்ள மாட்டோம் எனவும் தெரிவித்ததோடு, இக் கூட்டத்தில் அரசு சார்பான எவ்வித தீர்மானத் தையும் எடுக்கக்கூடாது எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.


எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு

## பணியாளர்கள் தேவை

**1] கணக்குப்பதிவாளர் [பயிற்சி] [பெண்]**

**தகைமை- க.பொ.த.உயர்தரம் வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தவராகவும் கணக்கியலில் திறமைச்சித்தி பெற்றவராகவும் இருக்க வேண்டும்.[ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.]**

**2] கணினி இயக்குனர் விற்பனையாளர் [பயிற்சி பெண்]**

**தகைமை- க.பொ.த.சாதாரண தரம் சித்தியடைந்தவராகவும் [ஆங்கில திறமைச்சித்தி விரும்பத்தக்கது] அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணினிடிப்ளோமா முடித்தவராக இருத்தல்வேண்டும்.**

**15-11-2003 நாள் காலை 10 மணிக்கு இலக்கம் 59 கண்டி வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள அக்ஸஸ்சோலர் சென்ரர் நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத்தேர்வுக்கு சுயவிபரக்கோவை மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் வரும்படி வேண்டப்படுகிறீர்கள்**

குறிப்பு:-

கிளிநொச்சி நகரில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (சி-8700)

# ஈராக்கிற்கு வெளிநாட்டுப் படைகளை வரவழைக்க அமெரிக்கா தீவிர முயற்சி!

## 14 நாடுகளின் உதவிகோர உத்தேசம்

(வாஷிங்டன்)

**ஈராக்கினுள் வெளிநாட்டுப் படைகளை வரவழைப்பதில் அமெரிக்கா அதிக அக்கறை காண்பித்து வருகிறது. பல நாடுகளிடம் படைகளை அனுப்புமாறு அது கோரிக்கை விடுக்கத் திட்டமிட்டுள்ளது.**

ஈராக்கில்சதாம் ஆதரவாளர்களின் தாக்குதல்களைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறும் அமெரிக்கா பல தடவைகள் வெளிநாடுகளிடம் படைகளை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுத்து வந்துள்ளமை தெரிந்ததே.

தற்போது இது குறித்துப் புதிய முயற்சிகளில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தீவிரமாக இறங்கியுள்ளது போல் தெரிகிறது.

சுமார் 14 நாடுகளிடம் படையினரை அனுப்புமாறு அமெரிக்கா கேட்கவுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான படைகளுக்கு ஏற்கனவே 32 நாடுகள் தமது படைகளை அனுப்பி வைத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் பிரதான நாடுகள் பல குறிப்பாக ஈராக் மீதான ஆக்கிரமிப்பை வலுவாக எதிர்த்து வந்த நாடுகள் தற்சமயம் அமெரிக்காவின் கீழ் பணியாற்ற மறுத்து வருகின்றன. அத்தோடு இவ் விவகாரத்தில் ஐ.நா. தலையீட்டையும் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகிறது. அத்துடன் தாக்குதல்களின் தன்மை தீவிரம் பெற்று வருகின்றன என்பது அங்கு அமெரிக்கப் படைகளுக்கு ஏற்படும் இழப்புக்களின் அளவுகள் கோடிட்டுக் காட்டுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறானதொரு சூழலில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மற்றுமொரு முயற்சியில் தீவிரமாக இறங்க முடிவு செய்துள்ளார்.

## வெளியேற்றம்!

ஈராக்கில் புனர்வாழ்வு பணிகளில் ஈடுபட்ட ஐ.நா. சபையின் ஊழியர்கள் அங்கிருந்து வெளியேறுகின்றனர்.

இவர்கள் சைபிரசில் ஒருவார காலம் தங்கியிருந்து தற்போதைய பாதுகாப்பு நிலைமை தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் பரிசீலனை செய்வார்களென கூறப்படுகிறது.

## இஸ்ரேல் பிரதமரைச் சந்திக்க அகமத் கூரி நிபந்தனை விதிப்பு


பலஸ்தீனப் பிரதமர் அகமத் கூரி இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனை சந்திப்பதற்கு நிபந்தனை விதித்துள்ளார்.

தொடர்ச்சியான வன்முறைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மத்திய கிழக்கு சமாதான திட்டத்தை மீளத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் பற்றி உறுதியளிக்கப்பட்டால் மட்டுமே இச்சந்திப்பு இடம் பெறும் என அவர் மேலும் கூறியுள்ளார். ஆனால் அமைதியை நிலைநாட்டும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளதென கூரி வலியுறுத்தும் திட்டங்களை இஸ்ரேல் முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.


பலஸ்தீன கிளர்ச்சியாளர் என குற்றம் சாட்டப்படும் ஒருவரை மேற்குக் கரையிலிருந்து காஸா பள்ளத்தாக்கிற்குக் கொண்டு வந்து குற்றச் சாட்டுக்கள் இன்றி அடைத்து வைக்க இஸ்ரேல்முனைவதாகக் கூறப்படுகிறது. இதனிடையே பலஸ்தீன நகரங்களில் தடைகளை நீக்குமாறு கிளர்ச்சியாளர்களிடம் தாம் கோரவுள்ள போர் நிறுத்தத்தை அனுசரிக்குமாறு பலஸ்தீனப் பிரதமர் இஸ்ரேலிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக அவரது பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.



இஸ்ரேலிய இராணுவத்தினரின் காவலில் இருந்த வேளை கொல்லப்பட்ட தமது இரு புதல்வர்களினதும் உருவப் படங்களை ஏந்தியவாறு காஸா நகரில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் கட்டடத்தின் முன்னால் நிற்கும் பலஸ்தீனத் தாய்.



கடந்த 5ம் திகதி ஏற்பட்ட சந்திர கிரகணத்தின் 4 வடிவங்கள் நியூயோர்க் நகரில் காணப்பட்டது.(இது நமது நாட்டில் புலப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது)



தலிபான், அல் –ஹைதா சந்தேக நபர்கள் எனக் கருதி கியூபா இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்ட இருவர் வெளியே பார்க்கிறார்கள்.



மேற்குக்கரை நேபள்ஸ் நகர அகதி முகாம் அருகே இஸ்ரேலிய வீரர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையில் இராணுவ டாங்கி மீது கற்களை எறியும் இளைஞர்கள்.

## இரகசிய அணுவாயுதத் திட்டங்கள் ஈரானில் உள்ளதற்கான தடயங்களில்லை

### -ஐ.நா.கண்காணிப்பு அமைப்பு அறிவிப்பு

ஈரானில் இரகசிய அணுவாயுதத் திட்டங்கள் இருப்பதற்கான தடயங்களைக் காணவில்லையென ஐ.நா. சபையின் அணுவாயுதக் கண்காணிப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையை ஆதாரமாக வைத்து ராய்ட்டர் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

அணுகுண்டைத் தயாரித்துவரும் ஈரான் அணுவள மின் உற்பத்தித் திட்டங்களைப் போர்வையாகப் பயன்படுத்துகின்றதென அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. ஈரான் அதனை நிராகரித்துள்ளது.

அதேவேளை தமது நாட்டின் மீது பல தசாப்தங்களாகத் தொடரும் சட்டவிரோதமான தடைகள் காரணமாகச் சில விடயங்களை மறைக்கத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக ஈரானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## ஜெயலலிதாவின் அதிகார துஸ்பிரயோகம் குறித்து மாநில ஆளுநரிடம் அறிக்கை எதிர்பார்ப்பு

### -பிரதமர் தி.மு.க.உறுப்பினர்களிடம் தகவல்

(புதுடில்லி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவரான ஸ்டாலின் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்களில் ஒரு குழுவினர் நேற்று முன்தினம் பிரதமரையும், துணைப்பிரதமரையும் டில்லியில் சந்தித்துள்ளனர்.

இதன் போது ஜெயலலிதா தலைமையிலான அரசு சர்வாதிகாரமாக நடந்து கொள்கிறதெனவும் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்துகிறதெனவும் கூறி இவ் விடயத்தில் தலையிட்டு உதவுமாறு இருவரையும் இவர்கள் கேட்டுள்ளனர். மாநிலத்தின் நிலைமை குறித்து மாநில ஆளுநரிடமிருந்து மத்தியரசு அறிக்கை ஒன்றை கோரும் எனப் பிரதமர் இக் குழுவினருக்கு வாக்குறுதி அளித்துள்ளார்.

இதனிடையே பத்திரிகையாளர்களுக்கான நிர்வாகிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் அவசர கூட்டம் ஒன்றை நடாத்தி எம்.பி.க்களுக்கும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்குமான உரிமைகளை உடனடியாகக் காக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்கள்.

## பத்திரிகையாளர் மீதான தமிழக அரசின் நடவடிக்கை உயர்நீதிமன்றால் நிறுத்தம்!

(சென்னை)

இந்தியாவின் மிகவும் முன்னணிப் பத்திரிகைகளின் 5 பத்திரிகையாளர்களையும் ஒரு பிரசுரிப்பாளரையும் கைது செய்யுமாறு தமிழக அரசு விடுத்த கட்டளையை இந்திய உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைநிறுத்தி வைத்துள்ளது.

பிரசுரிப்பாளர் எஸ்-ரங்கராஜன், ஆசிரியர் என்-ரவி, நிர்வாக ஆசிரியர் மாலினி பார்த்தசாரதி, இந்துவின் சென்னைப் பிரிவுப் பொறுப்பாளர், முரசொலி ஆசிரியர் எஸ்-செல்வம் ஆகியவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை சிறப்புரிமை மீறல் குற்றம் சாட்டப்பட்டு 15 நாள் சிறைத் தண்டனைக்குத் தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

இதற்கு எதிராக இப்பத்திரிகையாளர்கள் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் இவ் மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்ற நீதிபதி ஐ.கே.சபர்வால்,கைதை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

## பாதுகாப்பமைச்சர் விஜயம்

(வொஷிங்டன்)

அமெரிக்க பாதுகாப்பமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் இவ்வாரம் தென்கொரியா,ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிராந்தியத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கத் துருப்புக்கள் பற்றிய விடயங்கள் தொடர்பாகவும், பாதுகாப்பு சம்பந்தமான பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராய்வதே தனது விஜயத்தின் நோக்கம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் துருப்புக்களை வாபஸ் பெறுவது பற்றி எதனையும் அவர் கூறவில்லை.

## உயர் நீதிமன்ற தடையுத்தரவு ஜெயலலிதாவுக்கு பலத்த அடி

### நீதிமன்ற வளாகத்தில் வை. கோ

(சென்னை)

உயர்நீதிமன்றம் விதித்துள்ள தடை உத்தரவு தமிழக அரசிற்கு கிடைத்துள்ள பெரும் அடியாகுமென சிறையிலுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

பூந்தமல்லியில் பொடோ நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒரே நாளில் நாடு முழுவதின் ஆத்திரத்தையும் பெற்ற ஒரே நபர் ஜெயலலிதாவாகத்தான் இருக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றகழகத்தின் ஜனநாயக விரோத அரசிற்கு எதிராகவும், பத்திரிகை சுதந்திரத்தைக் காக்கவும் இன்று தி.மு.க. நடத்தவுள்ள மனித சங்கிலிப் போராட்டத்தில் மறுமலர்ச்சி தி.மு.க கலந்து கொள்ளுமென அவர் கூறியுள்ளார்.

# தமிழர்களுக்கு அதிக அதிகாரமெனக் கோசமிடும் சிங்கள இனவாதிகள் யோசனைகளை முன்வைக்கத் தயங்குவதேன்?

வரவு-செலவுத் திட்டம் தற்பொழுது நாட்டிற்கு மிக அவசியமான ஒன்றாகும். ஆனபடியால் பாராளமன்றத்தைக் கூட்டுவது மிக அவசியமாகும். அவசரகாலச் சட்டங்களைப் பிறப்பித்து அதைச் சனாதிபதியால் பிற்போட முடியாது. அப்படி அவர் செய்தால் நாட்டு மக்கள் அவருக்குச் சரியான பதிலடி கொடுப்பார்கள்-என்று புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

லங்காதீப பத்திரிகைக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியின் விபரம் வருமாறு:-

**கேள்வி:- மூன்று அமைச்சுகளையும் பொறுப்பேற்றல்,பாராளுமன்ற ஒத்திவைப்பு, அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்துதல் போன்றவைகளால் தற்பொழுது நாடு முகம்கொடுத்துள்ள பிரச்சினைகளைப் பற்றி என்ன கருத்தைக் கூறுகிறீர்கள்?**

**பதில்:-** நாட்டைக் குழப்பும் உரிமை சனாதிபதிக்குக் கிடையாது, நாட்டின் வரலாற்றில் முதன் முதலாகச் சமாதான நடவடிக்கைகயை விடுதலைப்புலிகள் தற்போது முன்வைத்துள்ளனர். இந்த சமாதானத் திட்டத்தில் தானும் ஒரு பங்காளியாக இருக்க வேண்டும். ஆனபடியால் இந்த அமைச்சுகளைப் பொறுப்பேற்று, இரு கட்சிகளும் இணைந்து சமாதான நடவடிக்கையை முன்னெடுப்பதற்குச் சனாதிபதியின் திட்டமாக உள்ளது- அப்படி இல்லாவிட்டால் நாட்டில் தொழிலாளர் வர்க்கத்திற்குக் கிடைக்கப்போகும் நன்மைகளை அவர் குழிதோண்டிப் புதைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பது அர்த்தமாகும். அப்படி அவர் செய்தால் நாட்டில் மக்கள் அவருக்குச் சரியான பதிலடி கொடுத்து அவரை நாட்டைவிட்டு விரட்டியடிப்பார்கள், வரவுசெலவுத் திட்டம் தற்பொழுது நாட்டிற்கு மிக அவசியமான ஒன்றாகும். ஆனபடியால் பாராளுமன்றத்தைக் கூட்டுவது மிக அவசியமாகும். அவசர காலச் சட்டங்களைப் பிறப்பித்து அதை இவரால் பின்போட முடியாது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரண்டு பெரும் கட்சிகளும் ஒன்றிணைய வேணடும்.

**கேள்வி:- 20 வருடகால யுத்தத்தின் பின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து,தற்பொழுது சமஷ்டி முறைக்குத் தமது விருப்பத்தை விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளார்கள். இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:-** அதாவது எதிர்க்கட்சியில் ஒரு சிலரே இதை எதிர்க்கின்றனர். 20 வருடகால யுத்தத்திற்குப் பின் அவர்கள் ஈழக் கோரிக்கையைக் விட்டு ஒரு சமஷ்டித் தீர்விற்கு வந்திருப்பதை நாங்கள் எல்லோரும் மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும். சமஷ்டி சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அவர்கள் ஆயத்தமாக இருக்கும் இந்த வேளையில் இடதுசாரிகளாகிய நாங்கள் இதை வரவேற்க வேண்டும்.

**கேள்வி:- யுத்தத்திற்குப் பதிலாக சமாதானத்தைப் புலிகள் அறிவித்திருக்கின்றார்கள். இதில் சில பிரச்சினைகள் தற்பொழுது ஏற்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு அவர்கள் சமஷ்டி ஆட்சியைக் கேட்டிருக்கிறார்கள். இதில் நீதிமன்றம், வரிஅறவிடுதல், காணி, வெளிநாட்டுக் கடனுதவிகள்,கடல் எல்லைகள் போன்றவைகள் இவர்களின் இடைக்கால நிர்வாகத்தில் அடங்கியுள்ளது. இது ஒரு சிக்கலை ஏற்படுத்தும் அல்லவா?**

**பதில்:-** நீங்கள் கூறியது எந்தக் கடிதத்தில் உள்ளது. நான் வாசித்த கடிதத்தில் அப்படி எதுவும் கிடையாது. நீங்கள் வாசித்த கடிதத்தில் எப்படி இருந்தது? சமாதானம் சம்பந்தமாக முடிவானதொரு தீர்மானம் வரும்வரை ஐந்து வருடங்கள் ஆட்சியைக் கேட்டுள்ளார்கள். அதற்கு முன்னதாகச் சமாதானம் சம்பந்தமாக ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தால், அதற்குப் பிறகு தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாரெனவும் கூறியுள்ளார்கள். ஆகவே எமது பக்கத்திலிருந்து ஒரு நிலையான பரிகாரம் ஒன்றை அவர்களுக்கு வழங்க வேண்டும். யாப்பின் 9 ஆம் பகுதியின்படி சட்டம், காணி, அமைதியை நிலைநாட்டுதல்,வரிஅறவிடுதல் போன்றவைகளை அவர்கள் கேட்டுள்ளார்கள். அவர்கள் கடற்பரப்பில் சுதந்திரமாக மீன் பிடிப்பதற்குக் கேட்டுள்ளார்களேதவிர முழுக் கடற்பரப்பையும் அவர்கள் கோரவில்லை. இதை எதிர்க்கட்சியினர் பிழையாகப் பயன்படுத்தியுள்ளார்கள். ஆகவே இவர்களின் உக்கிப்போன கயிறை மக்கள் சாப்பிட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். அரசியல் சட்டத்தின் கீழ் ஒரு முடிவுக்கு வரமுடியாது என்று கூறுவது, அரசியல் யாப்பிற்கு அப்பால் ஒரு சமஷ்டி ஆட்சி முறையைக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**கேள்வி:- நீங்கள் கூறுவதற்குப் பதிலாக தமிழ்ச்செல்வன் அவர்கள் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் தமிழ் மக்கள் அதன் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல முடியாதென அவர் ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறியுள்ளார். அது நாட்டின் அரசியல் யாப்பிற்கு விரோதமாக உள்ளதா?**

**பதில்:-** ஆம், 1979 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் யாப்பைத் திருத்தி அமைக்கும்படி அவர்கள் கேட்டுள்ளார்கள்.

**கேள்வி:- தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்திற்கு அப்பால், சமஷ்டி ஆட்சி முறையை விடுதலைப்புலிகள் கேட்டுள்ளார்கள் என்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

**பதில்:-** நிச்சயமாக ஆம், விடுதலைப் புலிகளோடு அரசாங்கம் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டது அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்ட செயலாகும். இன்று அவர்கள் அனுபவித்து வருவது இதையே. அரசியல் யாப்பின்படி எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பது நியாயமல்ல. இந்த அரசியல் யாப்புச் சிறந்ததென்றால் அதன்படி நாங்கள் செயற்படலாமல்லவா, அது பிழை என்றபடியால் புதிய அரசியல் யாப்பினை அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

**மொழியாக்கம்-சக்திவேல்**

**கேள்வி:- இலங்கை அரசியல் யாப்பிலிருந்து விடுதலைப்புலிகளுக்குப் புறம்பாகச் செயற்பட முடியாது. இங்கிலாந்து,அயர்லாந்திற்கும் ,நோர்வே பிக்மி இனத்தவர்களுக்கும்,அந்த நாட்டின் அரசியல் யாப்பிற்கேற்ப செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளார்கள் அது பற்றி....?**

**பதில்:-** அவர்கள் தமது யோசனைகளைச் சிறிலங்கா என்ற சொல்லை உட்படுத்தியே தயாரித்துள்ளார்கள். இலங்கையின் இடைக்கால நிர்வாகம் சிறிலங்கா என்ற சொல்லை வைத்தே தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சிறிலங்கா எமது நாடு என்று ஏற்றுக்கொண்டுள்ளனர்.



**கேள்வி:- புலிகள் அரசியல் யாப்பினை மீறி செயற்பட்டுள்ளபடியால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது ராஜ துரோக செயலாகும் என ஜே.வி.பி. கூறியுள்ளது. இதைப் பற்றிய என்ன நினைக்கின்றீர்கள்?**

ராஜதுரோக செயல்கள் எவ்வளவோ இந்த நாட்டில் நடைபெற்றுள்ளது. 1971 ஆம்,1988 ஆம் ஆண்டுகளில் கொலை செய்தல் நாட்டின் சொத்துக்களை அழித்து அரசியல் தலைவர்களை படுகொலை செய்தது இவைகள் எலலாம் இந்த நாட்டில் ஜே.வி.பியினர் செய்ததை அவர்கள் மறந்து விட்டார்கள் போல் தெரிகிறது. இது ராஜதுரோக செயல் இல்லையா, இப்பொழுது புலிகளுடன் பேசுவதுதான் ராஜ துரோகமா, மறைந்த தலைவர்கள் ஜே.ஆர். ஜெயவர்தனா, ஆர்.பிரேமதாசா,தற்போதைய ரணில் விக்கிரமசிங்க இவர்களும் ராஜதுரோகிகள்தானா? ஜே.வி.பி.யினர் கூறுவது மூன்றாம்தர ஆசனத்தில் அதாவது கலரியிலிருந்து படம் பார்ப்பதற்கு சமமானதாகும். இது அவர்கள் கூறும் விசர்க்கதைகளாகும். இவர்களை மாட்டு மந்தைகளுக்கு ஒப்பிடலாம்.

**கேள்வி:- நீங்கள் ஒரு திறமையான தொழிற்சங்கவாதி. எத்தனையோ போராட்டங்கள் நடத்தி கோரிக்கைகளை வென்றுள்ளீர்கள். விடுதலைப் புலிகளின் நகல் திட்டத்தில் இம்மாதிரியான செயற்திட்டங்கள் இருக்கலாம் அல்லவா?**

**பதில்:-** ஆம், சில வேளைகளில் இம்மாதிரியான திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். ஆனபடியால் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்குக் குரல் கொடுத்து வருகிறோம். அவர்களின் உரிமையைப் பறிக்காதீர்கள்.

**கேள்வி:- இந்த இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் முஸ்லிம்களைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றும் அவர்கள் மாற்றுத் திட்டத்தினை தயாரிக்கப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கூறியுள்ளார். இதைப் பற்றி என்ன கூறப்போகிறீர்கள்?**

அப்படி முஸ்லிம் காங்கிரஸ் கூறவில்லை. அரசாங்கத்திற்கும்,முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையில் சமஷ்டி ஆட்சியைப் பற்றி உடன்பாடு எற்பட்டுள்ளது. அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் போதாது என முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது. நான் புலிகளினால் சமர்ப்பித்துள்ள யோசனைகளைப் பற்றி திருப்தி அடைகிறேன். இந்த இடைக்கால நிர்வாகம் தமிழர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்துள்ளது என சிங்கள இனவாதிகள் கூறுகின்றார்கள். அப்படியானால் அவர்களின் யோசனைகளை முன் வைக்க ஏன் தயங்குகிறார்கள்.

**கேள்வி:- மங்கள சமரவீர புலிகள் சமர்ப்பித்திருக்கும் இடைக்கால நிர்வாகம், நாட்டை காட்டிக் கொடுத்து அவர்களுக்கு அடிபணிவதா, இல்லையேல் அவர்களின் சவால்களை ஏற்றுக் கொள்வதா என்று கூறியது எதைக் காட்டுகிறது?**

**பதில்:-** அவர் கூறியது சரி, ஆனால் இந்தியாவோடும்,அமெரிக்காவோடும் ஒப்பந்தம் செய்வதற்கு தெருத்தெருவாக கத்திக் கொண்டு திரிகிறார்களே பொதுஜன ஐக்கிய முன்னணியினர். இது நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு சமமானதாக இல்லையா அவர்களே தீர்மானிக்கட்டும். இவர்கள் கூறுவது அமெரிக்காவோடும், இந்தியாவோடும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அல்ல, விடுதலைப் புலிகளோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தையே சுட்டி காட்டியுள்ளார்கள்.

**கேள்வி:- ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைகளைக் தீர்த்துக் கொள்ளும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளைப் புலிகள் முன்வைத்துள்ளார்களா?**

பதில்:-ஆம், அவர்கள் நாட்டின் பல பாகங்களை நிர்வகித்து வருகிறார்கள். ஆனால் தற்பொழுது மத்திய அரசுடன் அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்தவே முயற்சி செய்து வருகிறார்கள்.

**கேள்வி:- தற்பொழுது புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கும் முன்னதாக அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளுக்கும் வித்தியாசம் உள்ளதென அரசாங்கம் கூறியுள்ளது. அது அரச பக்கத்தில் இருந்து வெளிவரும் கடும் பச்சை நிற வெளிச்சமாகத் தெரியவில்லை?**

**பதில்:-** அரசாங்கம் ஒவ்வொரு வெளிச்சங்களையும் காண்பிப்பது இது தருண மல்ல. கொடுத்த யோசனைகளுக்கு நல்ல தொரு தீர்வை முன்வைப்பதே சிறந்த வழி என நம்புகிறேன்.

**கேள்வி:- சகல அரசியல் கட்சிகளுக்கும், மக்களுக்கும் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாக தாங்கள் கூறும் அறிவுரை என்ன?**

**பதில்:-** முப்பது வருடங்களுக்குப் பின் இந்த நாட்டிற்கு நல்லதொரு ஆசீர்வாதம் கிடைத்துள்ளது. இந்த ஆசீர்வாதத்தை முறையாகப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு முன்வர வேண்டும்.

□ □ □ □

# எலிகளால் பரவும் காய்ச்சலினால் கேகாலையில் 97 பேர் பாதிப்பு

(கொழும்பு)

கேகாலையில் 97 பேர் எலிக் காய்ச்சலினால் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.மேலும் இந்த நோய் வேகமாக பரவி வருவதாக கூறப் படுகின்றது.

எலிக்காய்ச்சலினால் பீடிக்கப் பட்டவர்கள் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இவர்களில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்கள் மேலதிக சிகிச்சைக்காக கண்டிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

எலி, பூனை,ஆடு,மாடு ஆகிய வற்றில் உள்ள கிருமிகள் தண்ணீரில் பரவுவதால், மனிதர்களுக்கு இந்த நோய் ஏற்படுகின்றது என ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. உடலில் காயமோ, உரசல் காயமோ இருந்தாலும் இந்த கிருமி வேகமாக உடலுக்குள் புக முடியும் எனவும் ஆய்வுகள் கூறியுள்ளன.

ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்துவிட்டால் சிறுநீரகம், இருதயம் செயலிழந்து மரணம் சம்பவிக்கும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

# புகையிரத உறங்கல் இருக்கை ஆசனக் கட்டணம் அதிகரிப்பு

(வவுனியா செய்தியாளர்)

புகையிரத உறங்கல் இருக்கை ஆசனக் கட்டணம் அதிகரிக்கப்பட உள்ளது.

வவுனியா-கொழும்பு புகையிரத சேவையில் உறங்கல் இருக்கை ஆசனக் கட்டணம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட உள்ளது. மூன்றாம் வகுப்பு உறங்கல் இருக்கை ஆசனக் கட்டணம் 125 ரூபாவாகவும், இரண்டாம் வகுப்பு உறங்கல் இருக்கை ஆசனக் கட்டணம் 250 ரூபாவாகவும், முதலாம் வகுப்பு உறங்கல் இருக்கை ஆசனக் கட்டணம் 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் எதிர் வரும் 15 ஆம் திகதி முதல் உறங்கல் இருக்கை ஆசனங்களில் 3 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் முழுக் கட்டணமே அறவிடப்படும் எனவும் வவுனியா புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (10)

# தீவகப் பகுதிகளில் இடம்பெயர்ந்தோரில் 30 வீதத்திற்கும் குறைவானோரே மீள்குடியமர்வு

## படையினரே மீள் குடியமர்வுக்கு முட்டுக்கட்டை

(வடமராட்சி)

**1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தீவுப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இடம்பெயர்ந்திருந்த மக்களில் முப்பது வீதத்திற்கும் குறைவான தொகையினரே மீளக் குடியமர்ந்துள்ளதாகத் தெரியவருகின்றது.**

குறிப்பாக தீவகத்தில் தெற்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 52 ஆயிரத்து எழுநூறு குடியிருப்பாளர்கள் வசித்து வந்திருந்தபோதும் தற்போது சுமார் 16 ஆயிரம் குடியிருப்பாளர்களே மீளக்குடியமர்ந்துள்ளனர்.

மண்டைதீவுப் பகுதியில் குறித்த காலப்பகுதியில் ஐயாயிரத்து முப்பது குடியிருப்பாளர்கள் வசித்து வந்திருந்த போதிலும் தற்போதைய சமாதானச் சூழலில் சுமார் 1131 குடியிருப்பாளர்களே மீளக் குடியமர்ந்துள்ளனர்.

அத்துடன் புங்குடுதீவுப் பகுதியில் 20 ஆயிரத்துக்குமதிகமான மக்கள் வாழ்ந்து வந்திருந்தபோதும் தற்போதுவரை 4 ஆயிரத்திற்கும் குறைவான குடியிருப்பாளர்களே மீள் குடியமர்ந்துள்ளனர்.

இதேவேளை அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை மற்றும் சரவணைப் பகுதிகளில் வசித்து வந்த 22ஆயிரத்து அறுநூற்றுக்கும் அதிகமான குடியிருப்பாளர்களில் தற்போது வரை சுமார் 8000 குடியிருப்பாளர்களே மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இப்பகுதிகளில் தொடரும் இராணுவ சூழல், குறிப்பிட்ட சில பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமை என்பவையே மக்கள் மீள் குடியமரப் பின்னடிப்பதற்குக் காரணமென தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கணிசமான இடம்பெயர்ந்த குடும்பங்கள் யாழ்.நகர் மற்றும் அதனையண்டிய பகுதிகளிலேயே தொடர்ந்தும் வசித்து வருகின்றன. (27)

## அன்பளிப்பு

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்திற்கு நெக்கொட் நிறுவனம் ஒரு தொகுதி தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. இதன் மூலம் பற்றாக்குறை ஓரளவு நீங்கியுள்ளது.




இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடாத்தப்பட்ட தொண்டர்களுக்கான முதலுதவிப் பயிற்சிநெறி. வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இது நடைபெற்று வருகின்றது. (படம் சோதி)

# குன்றும் குழியுமாகவுள்ள வீதிகளில் மழை நீர் தேங்கியுள்ளமையால் சிரமம்!

(அலுவலக செய்தியாளர்)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதிகளில் மழைநீர் தேங்கி நிற்பதன் காரணமாக அவ்வீதிகளூடாகப் பயணிப்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கரடிப்போக்கிலிருந்து குஞ்சுப்பரந்தனூடாகப் பூநகரிபிரதான வீதிக்குச் செல்லும் 5 கி.மீ. நீளமான வீதி கடந்த பல வருடகாலமாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பெறாமையின் காரணமாக மேற்படி வீதி பாரிய சேதத்திற்குள்ளாகி குன்றும், குழியுமாக உள்ளது. இதன் காரணமாக அவ்வீதியூடாக பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் முதல் பொது மக்கள், வாகன ஓட்டிகள் வரை பெரும் சிரமத்திற்கு மத்தியிலே அவ்வீதியூடாகப் பயணித்து வருவதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

மேற்படி வீதியானது கிளிநொச்சி நகரில் முதற் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே அமைக்கப்பெற்ற பிரதான வீதியென்பதும், பூநகரியிலிருந்து கிளிநொச்சிக்குப் பயணிப்பவர்கள் பிரயோகப்படுத்தும் முக்கிய வீதி யென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக 5ஆம் வாய்க்கால், பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், பகுதிகளைச் சேர்ந்த 250இற்கும் மேற்பட்ட சகல பிரிவுகளையும் சேர்ந்த மாணவ மாணவிகள் இவ்வீதியூடாகவே கிளிநொச்சி நகர பாடசாலைகளுக்குச் சென்று வருகின்றனர்.

இவ்வீதியின் ஒரு கரையானது நீர்ப்பாசன வாய்க்காலினையும், மறுகரையானது பற்றைக்காடுகளையும் கொண்டதாகவுள்ளது.

இதன் காரணமாக இவ்வீதியில் பயணிப்பவர்கள் யாவரும் பலத்த சிரமங்களுக்கும் இன்னல்களுக்கும் மத்தியிலேயே பயணத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

பல வருடகாலமாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பெறாது சிதைவுற்றிருக்கும் இவ் வீதியினை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் முன்வந்து சீர்செய்துதர முன்வரமாட்டார்களாவென அப்பகுதி வாழ் மக்கள் வேண்டி நிற்கின்றனர். (சோ)





## சட்டத்தரணி விபத்தில் பலி

யாழ். நகரின் 4ஆம் குறுக்குத்தெருப்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி சட்டத்தரணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இடம்பெயர்ந்து கொழும்புத்துறைப் பகுதியில் வசித்து வந்த இ.ஜெயசிங்கம் (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ். நீதிமன்றிலிருந்து வீடுதிரும்பிக்கொண்டிருந்த இவரது மோட்டார் சைக்கிளும் வேகமாக வந்தஇசுசு ரக வான் ஒன்றும் மோதிக்கொண்டதையடுத்து அவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார். (27)

## உதவியை எதிர்பார்க்கும் இடம்பெயர்ந்த மக்கள்

பருவமழை ஆரம்பித்துள்ள இவ்வேளையில் புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் பெரும் துன்பப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. வீடுகள் வேயப்படுவதற்குக் கூட வசதியற்ற நிலையில் இவர்கள் உள்ளனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனங்களின் உதவியை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். (26)

## மஹாபொல புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

2002-2003 (ஏ) தொகுதி மாணவர்களுக்கான மஹாபொல புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 15 ஆம் திகதி நாடெங்கிலுமுள்ள பல்கலைக் கழகங்களில் இடம் பெறும் என்று மஹாபொல உயர்கல்வி நம்பிக்கை நிதியப் பொறுப்பாளரும் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சருமான ரவிகருணா நாயக்கா கூறியுள்ளார்.

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் இவ் வைபவம் அன்றைய தினம் மாலையும்,ஏனைய அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இச் சான்றிதழ் வழங்கும் வைபவம் அன்றைய தினம் காலை 10 மணிக்கும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வு முதன் முறையாக பல்கலைக்கழக மட்டத்தில் நாடளாவிய ரீதியில் இடம் பெறுகின்றமை குறிப்பிடத் தக்கது.

மஹாபொல புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு 3 மாதங்களுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இவ்வருடத்தின் 2 ஆவது தொகுதியான 2002-2003 (ஏ) தொகுதியில் மொத்தமாக 8200 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், இவர்களில் 7200 பேர் பல்கலைக்கழகங்களைச் சார்ந்தவர்களும் ஏனைய 1000 பேர் உயர் கல்வி நிலையங்களில் கல்வி கற்பவர்களுமாவர்.

# உழைப்பாளரை இழந்த குடும்பங்களுக்கு ஐ.நா.உதவியில் சுயமுயற்சி கடன் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் யு.என்.டி.பி. (ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்) நிறுவன உதவியுடன் உழைப்பாளரை இழந்த குடும்பங்களுக்கு சுயமுயற்சிக் கடன் வழங்கப் பெற்றது.

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன முதன்மைச் செயலக இணைப்பாளர் கமலாம்பிகை தலைமையில் கடந்த 8 ஆம் திகதியன்று பி.ப.2.30 மணிக்கு தொழிற் பயிற்சி நிலையத்தில் வைத்து மேற்படி சுய முயற்சிக் கடன்வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. வட்டக்கச்சிப் பகுதியில் உழைப்பாளரை இழந்த பதினைந்து குடும்பங்களுக்கு மேற்படி சுயமுயற்சிக் கடனாக 168,000 ரூபா வழங்கப் பெற்றது. திட்டசெயற்பாடுகள் குறித்து நிறுவன முதன்மை செயலகபணிப்பாளர் சுதர்சினி, கிளி மாவட்ட இணைப்பாளர் வினோ ஆகியோர் பயனாளிகளுக்குக் கருத்துரை வழங்கினர். (சோ)

## நிர்வாகத் தெரிவு

(கண்டாவளை)

பரந்தன் நகர் வர்த்தக சங்க புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் ஞாயிறன்று பி.ப.3.30 மணிக்கு கிளி/பரந்தன் இந்து ம.வி மண்டபத்தில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.சுதா தலைமையில் நடை பெற்றது.

இத் தெரிவில் தலைவராக ஜெயந்தன், செயலாளராக யோ.யூட் சுகந்தன், பொருளாளராக சூரியமூர்த்தியும் மேலும் ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். (14)

## செயற்கை உறுப்பு நிபுணர் மைக் மார்புளோ கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தினரால் பிரதம செயற்கை உறுப்பு நிபுணர் மைக் மார்புளோவினை கௌரவிக்கும் நிகழ்வு இன்று மாலை 6.00 மணிக்கு கிளிநொச்சி வெண்புறா நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

செயற்கைக்கால் தயாரித்து வழங்குவதில் புதிய சகாப்தத்தினை ஏற்படுத்தியதுடன், புதிய தொழில் நுட்பத்தினையும் அவற்றைக் கையாளும் முறைகளையும் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்பவியலாளர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்து தற்போது தாய்நாடு திரும்பவுள்ள நிபுணர் மைக் மார்புளோவை இன்றைய நிகழ்வில் கௌரவிக்கப் பெறவுள்ளதுடன், மற்றும் பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறும் தொழில் நுட்பவியலாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளதென வெண்புறா நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## வடக்கு தெற்கு ஊடகவியலாளர் சங்கம் மீள் அங்குரார்ப்பணம்

(வடமராட்சி)

வடக்கு- தெற்கு ஊடகவியலாளர்சங்க மீள் அங்குராப்பண விழா கொழும்பு "ரேணுகா ஹோட்டலில்" கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாக இடம் பெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டின் கீழ் இடம்பெற்ற இந் நிகழ்வில் அதன் ஆளுநர்சபை உறுப்பினர் நிமலன் கார்த்திகேயன் மற்றும் ஊடக இயக்குநர் கலாநிதி ஜெகான் பெரேரா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர் சங்கத்தின் இணைத்தலைவர்களாக ஸ்ரான்லி சமரசிங்க மற்றும் சி.கதிர்காமத்தம்பி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சங்கத்தின் போசகர்களாக தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த நிமலன் கார்த்திகேயன் மற்றும் ஜெகான் பெரேரா ஆகியோர்களுடன், யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள பீடாதிபதி எஸ்கே. சிற்றம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இணை செயலாளர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் பத்துப் பேரும் இருபான்மை இனங்களிலுமிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

நாடு முழுவதிலுமாகப் பத்திரிகையாளர்களது ஒருமித்த குரலை வெளிப்படுத்தவும், அவர்களது உரிமைகளைப் பேணும் வகையிலுமாகவே இப்பத்திரிகையாளர் சங்கம் யாழ்ப்பாணத்தில் 2001ம் ஆண்டு ஏப்பிரல் 18ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தது. எனினும் செயற்படாதிருந்த இச்சங்கமே தற்போது மீள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

# சனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகள் சமாதானத்திற்கு சவாலாக அமைந்துள்ளன

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

**சனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகள் இலங்கையின் சமாதானத்திற்கு ஓர் அச்சுறுத்தல் மட்டுமன்றி சமாதானத்திற்கு ஒரு சவாலாகவுமுள்ளது.**

இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள சமகால அரசியல் நிலை தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஒப்பமிட்டு விடுத்துள்ள அந்தப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைவு தென்னிலங்கை மக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்கிறது.நாடு பிளவுபடாமல் பிரச்சினையைத் தீர்க்கப் புலிகள் வழங்கிய இறுதிச் சந்தர்ப்பம் இது.

வாழ் அல்லது வாழ விடு என்ற தத்துவத்திற்கேற்ப தென்னிலங்கை மக்கள் இதனை ஏற்று அனுமதித்தால் இன சௌஜன்யத்துடன் வாழலாம். நாடு பிளவுபடாமல் ஒரு நாட்டினுள் நிம்மதியாக வாழ வேண்டுமெனின் புலிகளின் இறுதிச் சந்தர்ப்பத்தை தென்னிலங்கை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# இந்திய இராணுவத்தினரால் வெடிபொருட்கள் அகற்றல்

(வவுனியா)

இந்திய இராணுவ கண்ணிவெடி அகற்றும் நிபுணர்குழு ஓமந்தைப் பிரதேசத்தில் வெடிபொருட்களை அகற்றி வருகின்றது.

ஓமந்தைப் பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியேறி இருந்தாலும் கூட அப்பிரதேசத்தில் முழுமையாக வெடி பொருட்கள் அகற்றப்படாமையினால் மக்கள் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையிலேயே வெடிபொருட்கள் அகற்றப்படாத பகுதிகளில் உள்ள வெடி பொருட்களை இந்திய இராணுவ கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழுஅகற்றி வருகின்றது.

இக்குழு ஏற்கனவே செட்டிகுளம் பகுதியில் வெடி பொருட்களை அகற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# கொழும்பிற்கு மீன்பிடி வலை வாங்கச்சென்ற தமிழ் குடும்பஸ்தர் காணாமல் போனார்!

## - மன்னார் பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு

மன்னார் பேசாலையைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தை ஒருவர் கொழும்பில் காணாமல் போனது தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழுவினரிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

பேசாலை எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த அல்பிரட்டெனி சாஞ்சே (வயது 43) கடந்த மாதம் 17ஆம் திகதியிலிருந்து காணாமற் போயுள்ளதாக அவரின் மனைவி ஞானமலர் சாஞ்சே பிரஜைகள் குழுவினரிடம் முறையீடு செய்துள்ளார்.

மீனவரான தனது கணவர் கடந்த மாதம் 17ஆம் திகதி மீன்பிடி வலைகள் வாங்குவதற்காக கொழும்பு சென்றதன் பின்னர் வீடு திரும் பவில்லை எனவும் கணவரின் நிலை தொடர்பாக தகவல் எதையும் இதுவரை அறிய முடியாதுள்ளதினால் அதனையிட்டு நடவடிக்கை எடுக்குமாறும் பிரஜைகள் குழுவினரிடம் கோரியுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் காணாமல் போனது குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மின்சார சபை காரியாலய அசமந்த போக்கால் விசனம்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்.சுன்னாகம் மின்சார சபைக் காரியாலயத்தில் மின் இணைப்பிற்கான பழைய மின் தொடர் இலக்கத்தினைப் பெறுவதற்கெனச் செல்பவர்கள், அங்கு மின்தொடர் இலக்கத்தினைப் பெறமுடியாது அவலப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து மின் தொடர் இலக்கத்தினைப் பெறுவதற்குப் பல நாட்களாகச் சுன்னாகம் மின்சாரசபைக் காரியாலயத்திற்குப் பல தடவைகள் சமுகம் கொடுத்தும் தொடர் இலக்கத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாது திரும்பிய நபர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில்,

கரந்தன் வீதி நீர்வேலியில் வசிக்கும் மேற்படி நபர் தனது வீட்டிற்கு மின் இணைப்பினைப் பெறும் பொருட்டு வீட்டின் முன்னைய மின் இணைப்பின் தொடர் இலக்கத்தினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கடந்த 25 ஆம் திகதியன்று சுன்னாகம் மின்சாரசபை காரியாலயத்திற்குச் சென்று அங்கு கடமையிலிருந்த ஊழியருடன் தொடர்புகொண்டபொழுது, இரு நாட்கள் கழித்து சமுகம் கொடுக்கும்படி தெரிவித்துள்ளார். மீண்டும் மேற்படி நபர் குறிப்பிட்டபடி இரு தினங்கள் கழித்து மின்சாரசபைக்குச் சென்றபொழுது இன்று நேரமில்லை. 5 ஆம் திகதி வரும்படி கூறினார்கள். மீண்டும் 5 ஆம் திகதி சென்ற பொழுது இன்று கலியாண வீட்டிற்குச் செல்லவுள்ளதால் வெள்ளி வரும்படி கூறினார்கள். இப்படித்தான் உங்கள் சபையின் நிர்வாகச் செயற்பாடா? என்று கேட்டதற்கு அவர்கள் மின்சாரசபை எந்திரியிடம் சென்று முறையிட்டார்கள். உடன் எந்திரி என்னை வரவழைத்து விசாரித்துவிட்டு இன்று நேரமில்லை வெள்ளிக்கிழமை வரும்படி தெரிவித்துள்ளார். இதனால் விசனமடைந்த மேற்படி நபர் மின்விநியோகம் பெற்றுக்கொள்ளும் முயற்சியைக் கைவிட்டுள்ளார்.

ஒரு கிராம சேவகருக்கே இந்நிலை ஏற்பட்டதென்பது குறிபபிடத்தக்கது.(சோ)

# பாடசாலை தவணை அட்டவணை கல்வியமைச்சால் வெளியீடு

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் 2004 ஆம் ஆண்டுக்கான பாடசாலைத் தவணைஅட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. வெளியீடு செய்யப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்- சிங்களப் பாடசாலைகளில் முதலாம் தவணை 2004 ஜனவரி மாதம் 5ம் திகதி முதல் ஏப்ரல் இரண்டாம் திகதி வரையும்,

இரண்டாம் தவணை 2004 ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வரையும், மூன்றாம் தவணை 2004 செப்டம்பர் 1ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரையும் நடைபெறும்.

முஸ்லிம் பாடசாலைகளில் முதலாம் தவணை 2004 ஜனவரி 5ஆம் திகதி முதல் ஏப்பிரல் 8ஆம் திகதி வரையும். இரண்டாம் தவணை 2004 ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி வரையும், மூன்றாம் தவணை 2004 ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முதல் டிசம்பர் 10 ஆம் திகதி வரையும் நடைபெறும் முஸ்லிம் பாடசாலைகள் றம்ழான் நோன்பை முன்னிட்டு அக்டோபர் 14ஆம் திகதி முதல் நவம்பர் 18ஆம் திகதி வரை மூடப்படும் என்றும் க.பொ.த உயர் தரப் பரீட்சை நிலையங்களாக செயற்படும் பாடசாலைகள் குறையும் நாட்களுக்காக சனிக்கிழமைகளில் பாடசாலை நடத்தப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துரித செயற்பாடு

(கொழும்பு)

க.பொ.த.சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகளை மிகவிரைவில் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ் அடையாள அட்டைகளைச் சம்பந்தப்பட்டோருக்குத் தபால் மூலம் அனுப்பும் பணி ஆரம்பமாகியுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நவீனமயப்படுத்த ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டின் பல பகதிகளில் உள்ள 100 எரிபொருள் நிரப்பு நிலையங்களை நவீன மயப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகப் பெற்றோலியக்கூட்டுத்தாபனம்கூறியுள்ளது.

நுகர்வோருக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதே இதன நோக்கம் என கூட்டுத்தாபனத்தின் தலைவர் கூறியுள்ளார்.

சிபெக்கோ என்ற வர்த்தகப் பெயரில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பேணப்படவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். அவற்றைப் புனரமைப்பதற்காக 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

# அக்டோபரில் 5163 பேர் சிகிச்சை

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த அக்டோபர் மாதம் 5163 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்தியசாலையில் கடந்த மாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவில் 3548 பேரும் இதில் சாதாரன காய்ச்சல்னால் 840பேரும் சிரங்கினால் 398 பேரும் குருதிச் சோகையினாலும் 214பேரும் மலேரியாக் காய்ச்சலினால் 56பேரும் வயிற்றோட்டத்தினால் 25பேரும் சிறுசத்திர சிகிசையில் 14பேரும் சிகிச்சை பெற்றுள்ளதாகதெரி விக்கும் அவ்வறிக்கை மேலும் விபரமாக தெரிவிக்கையில் மேற்படி நோயாளர்களில் ஒரு அகவைக்கு உட்பட்ட குழந்தைகளில் சாதாரண காய்ச்சலினால் 80 குழந்தைகளும் வயிற்றோட்டத்தினால் இரண்டு குழந்தை களும் ஒரு அகவை தொடக்கம்5 அகவை வரையான சிறார்களில்சாதாரண காய்ச்சலினால் 240சிறார்க ளும் சிரங்கினால் 142 சிறார்களும் வயிற்றோட்டத்தினால் 14சிறார்களும் சிகிச்சை பெற்றுள்ளதாக விபரமாக தெரிவிக்கும் அவ் அறிக்கையின்படி மேற்படி வைத்திய சாலையின் பிரசவ விடுதியில் கடந்த மாதம் பிரசவத்திற்காக 41 தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு அதில் 27 சிசுப்பிறப்பு நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# கைதடியில் படையினரால் கைதாகி காணாமல் போன 24பேர் குறித்த விசாரணை விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைதடியில் நடைபெற்ற சுற்றிவளைப்பில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போன 24பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுத்தாக்கல்களுக்குரிய விசாரணைகள் எதிர்வரும் 20,25,27,28ஆம் திகதிகளில் யாழ்.மேல்நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

மேல்நீதிமன்ற நீதவான் சி.வரதராஜா முன்நிலையில் நடைபெறவுள்ள இவ் விசாரணைகளில் காணாமல்போனோர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணியும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அ.விநாயமூர்த்தியும் மனித உரிமைகள் சட்டத்தரணிகளான எம்.றெமீடியஸ், மற்றும் சந்திரபால குமாரகே ஆகியோரும் எதிராளிகளான முப்படைத் தளபதி லயனல் பலகல்ல, இராணுவத் தளபதி லெப்.கேணல்.டுமிந்தகெப்பிற்றிகலாவ மற்றும் சட்டமா அதிபர் கமலசபேசன் ஆகியோர் சார்பில் இராணுவ அரச சட்டத்தரணி குறூப்பும் ஆஜராகி வாதங்களை நடத்துவர்.

இதேவேளை இவ்விசாரணைகளுக்குரிய அழைப்பாணைக் கடிதங்கள் எதிராளிகளுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

# நவீன மீன்பிடி முறைகளை கையாளப் படையினர் தடை

(யாழ்ப்பாணம்)

கச்சாய்ப் பகுதி கடற்தொழிலாளர்கள் தம்தொழில் தொழில் விருத்தி கருதி புதிய இயந்திரப் படகுகள் மற்றும் கடற்தொழில் உபகரணங்களை எடுத்துவர மேற்கொண்ட முயற்சிக்குப்படையினர் தடைவிதித்துள்ளனர்.

நீண்டகாலமாக இப் பகுதியை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த படையினர் தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து அப்பகுதி மக்களை மீளக் குடியமர அனுமதித்தாலும் கட்டுமரத் தொழில்களைச் செய்வதற்கு மட்டுமே அனுமதித்தனர்.

ஆனால் இப் பகுதி மக்களின் தொடர் கோரிக்கைகளைத் தொடர்ந்து இயந்திர வள்ளத்தில் சென்று மீன் பிடிப்பதற்குரிய அனுமதி படையினரால் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட உபகரணங்கள் கொண்டு வருவது தொடர்பான முயற்சிக்குப் படையினர் தடைவிதித்துள்ளதால் இப்பகுதியில் வாழும் சுமார் 100 வரையான மீன்பிடிக் குடும்பங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. (33)


# சேரன் வாணிபம்

## ஊர்தி ஓட்டுநர் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

எமது வாணிபத்தினால் மேற்கொள்ளப்படும் ஊர்தி ஓட்டுநர் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :-**

1. வயது 21 - 28ற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. உயரம் 5' 3''ற்கு மேல் இருத்தல் வேண்டும்.
3. எடை 53 கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும்.
4. ஆண்டு 08 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
5. வன்னிப் பெருநிலப்பரப்பில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி கைமை உடையோர் கீழ்க் காணும் முகவரிக்கு தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை,கல்விச் சான்று என்பவற்றுடன் 2003-11-14 நாளன்று காலை 10.00 மணிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

நடுவப் பணியகம்,
சேரன் வாணிபம்,
கிளிநொச்சி.

(சி-8697)



**சிந்தனைக்கு**

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே, பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 12-11-2003

## இரு தரப்புப் பிரச்சினையல்ல

இலங்கையில் தற்பொழுது நிகழும் அரசியல் நெருக்கடிகள் விரைவாக முடிவிற்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையானது இனப்பிரச்சினை தொடர்பாக சிங்கள அரசியல் வாதிகளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டுள்ளது அன்றிப் புரியத் தொடங்கியுள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரமானது, சிறிலங்கா அரசு- தமிழர் தரப்பு என இரு தரப்புப் பிரச்சினையே எனினும், அது எவ்வேளையிலும் இரு தரப்பு விவகாரமாக அதாவது சிறிலங்கா ஆளும் தரப்பினர் – தமிழர் தரப்பினர் என இரு தரப்புப் பிரச்சினையாக இருந்ததில்லை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி, தமிழர் தரப்பு (விடுதலைப்புலிகள்) என முத்தரப்புப் பிரச்சினையாகவே இருந்து வந்துள்ளது.

அதாவது, இனப்பிரச்சினை விவகாரம் தனியாக ஆளும் சிங்கள கட்சியுடனோ அன்றி தமிழர் தரப்பினருடன் மட்டுமோ உரிய விடயமல்ல. காலாகாலமாக எதிர்க்கட்சிகளும் இதில் பங்காற்றியுள்ளனர். வேறுவிதமாகக் கூறுவதானால், தமது அரசியல் அபிலாசைகளுக்காக இவர்கள் இனப்பிரச்சினை விவகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

இதில், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடு எப்பொழுதுமே இருந்ததில்லை. அதாவது, இனப்பிரச்சினை விவகாரத்தில் இவை ஒன்றிற்கொன்று எதிரான நிலைப்பாட்டையே எப்பொழுதும். மேற்கொண்டு வந்துள்ளன. இந்த வகையிலேயே தற்பொழுதும் இனப்பிரச்சினை விவகாரத்தில் எதிர்க்கட்சியான பொ. ஐ. முன்னணியின் தலைவி சனாதிபதி சந்திரிகா ஆளும் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆனால், இனப்பிரச்சினை விவகாரத்திற்கு அரசியல் தீர்வு காணப்படுதல் வேண்டும் என வலியுறுத்தியவர்கள் – குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகள் அரசியல் தீர்விற்கு விடுதலைப் புலிகளே பெரும் முட்டுக்கட்டை என்ற ரீதியிலேயே உணர்வுகளைக் கொண்டிருந்தன. நடவடிக்கைகளை மேற்கொண்டும் இருந்தன.

இதற்கு இவர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக கடந்த காலச் சம்பவங்களை அறிந்து கொள்ளாமை அன்றி அவற்றை மறுதலிக்க முற்பட்டமையே காரணமாக இருக்க முடியும். இலங்கையில் இனப்பிரச்சினை என்பது பெரும் ஆயுதப் போராட்டமாக முனைப்புப் பெற்றமைக்கு சிங்கள ஆட்சியாளர்களிடம் இருந்த இனவாதச் சிந்தனையை மட்டுமல்ல, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக நாட்டு நலன் என்பதை அவர்கள் புறந்தள்ளத் தயாராக இருந்தமையும் முக்கிய காரணமாகும்.

அதாவது, இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்த இரண்டு பிரதான கட்சிகளும் எப்பொழுதுமே இனப்பிரச்சினை விவகாரத்தில் ஒத்துழைக்கத் தயாராக இருக்கவில்லை. மாறாக, ஒன்றிற்கொன்று எதிரான நிலைப்பாட்டையே கைக்கொண்டனர். வெளியார் தலையீடு செய்து இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்ட போதும் அதனையே செய்தனர்.

எடுத்துக் காட்டாக, இந்தியா இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையீடு செய்தபோதும் இத்தகையதொரு நிலைப்பாட்டையே மேற்கொண்டனர். அன்றைய எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்திய–சிறிலங்கா சமாதான உடன்பாட்டை எதிர்த்ததோடு, முதலாவது மாகாண சபைத் தேர்தலையும் பகிஷ்கரித்தது.

அதாவது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சிங்கள அரசியல் கட்சிகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு அதனைத் தோற்கடித்தன என்றே கூறலாம். இதனை இனவாத ரீதியில் செயற்படுவதில் அவை போட்டியிட்டன என்றும் கூறலாம். மாறாகச் சமாதான முயற்சிக்கு எதிராகச் செயற்படுவதில் போட்டியிட்டன எனவும் கூறலாம்.

இவர்களின் இத்தகைய போட்டியே சமாதான முயற்சிகளைப் பெருமளவில் சீர்குலைவிற்கு உள்ளாக்கியிருந்தன. ஆனால், தமிழ்த் தலைமைகளின் நடவடிக்கைகள் எப்பொழுதும் சமாதான முயற்சிகளுக்கு இடையூறாக இருந்ததில்லை. ஆனால், தொடர்ந்து தமிழர்கள் ஏமாற்றப்பட்டதினால், விடுதலைப் புலிகளின் தலைமை மீண்டும் ஒருமுறை தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்கத் தயாராக இருக்கவில்லை. இதுவே விடுதலைப் புலிகள் கடும் போக்காளர்கள் என்ற தோற்றப்பாட்டை வெளிக்காட்டுவதாக இருந்தது.

ஆகையினால், சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என வற்புறுத்த முற்பட்ட வெளியார், புலிகள் மீது சில அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என எண்ணினர். ஆனால், தற்பொழுது இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது யார் என்பதை சகலரும் புரிந்து கொள்ளத்தக்கதாய் இருந்திருக்கும். இதன் வெளிப்பாடே இலங்கையில் தற்பொழுது நிகழும் அரசியல் நெருக்கடிகள் விரைவாக முடிவிற்குக் கொண்டு வருதல் வேண்டும் என்ற அமெரிக்காவின் அறிவிப்பு எனக் கொள்ளலாம்.

## ஆட்சியாளருக்கு தகுந்த அறிவுரைகள் வழங்க மகாசங்க பிக்குகளின் சபை உருவாகும்!

### தேசிய பிக்குமார் சங்கம் ஏற்பாடு

(கொழும்பு)

நாட்டில் தற்போது தோன்றியுள்ள அரசியல், பொருளாதார,கலாச்சார பிரச்சினைகள் தொடர்பாக அகில இலங்கை மகா சங்க சம்மேளனம் தமது யோசனைகளைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையிலும் ஆளும் கட்சிக்கு அறிவுரை கூறும் நோக்கிலும் சர்வதேச மட்டத்தில் அனுபவமும் அறிவும் வாய்ந்த 25 மகாசங்கப் பிக்குகளைக்கொண்ட சபை ஒன்றை ஏற்படுத்தத் தேசிய பிக்குமார் சங்கம் தீர்மானித்துள்ளது.

இச்சபை அமைக்கும் விடயம் தொடர்பாக இன்று கண்டி தலதா மாளிகையில் கூட்டம் ஒன்று நடைபெறுகின்றது. இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் பொரளையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றும் இடம்பெற்றது.

அப்போது தேசிய மகா சங்கத்தின் தலைவரான எல்லாவல மேதானந்த தேரர் உரையாற்றுகையில் கூறியதாவது, தற்போது, முழு நாடும் பாரிய பிரசினைக்குள்ளாகியிருப்பதாகவும் வரலாற்று ரீதியாக பதில் கூற வேண்டிய நிலையில் மத குருமார் இருப்பதாகவும் அதனை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

சில பிக்குமார்கள் இதற்கான மறு மொழியைக் கூறாமல் சென்றதால் மகாசங்கத்தின் பலம் குன்றிவிட்டது எம்மிடம் அந்தப் பொறுப்பு விடப்பட்டிருக்கிறது. அத்துடன் உத்தேச சபையில் 22 பேர் அங்கம் வகிப்பதாகவும் அதற்கு ஆலோசனை வழங்க சர்வதேச அனுபவமுள்ள சங்கநாயக்கர்களை தெரிவுசெய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சபை அமைக்கப்பட்ட பின்னர் நாட்டின் பாதுகாப்பு என்ற வகையிலான பொறுப்பு அதனிடம் இருக்கும்.

மகா சங்கத்தின் செயலர் உரையாற்றும் போது, சர்வதேச அமைப்புக்களால் இந் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களில் அவர்களே பங்கெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

குரங்கு பாஞ்சன் முகாம் பற்றி ஒருவர் கேட்டபோது அது பற்றி சனாதிபதி எடுக்க வேண்டிய முடிவு என்று கூறியதுடன் நிச்சயமாக அது அகற்றப்பட வேண்டியது எனவும் கூறினார்.

கடந்த காலங்களில் தேசபிரேமிகளின் நடவடிக்கைகளில் கலந்து கொண்ட பிக்குகள் பற்றி கேட்ட போது, நரகத்துக்குச் செல்லும் வகையில் ஆற்றிய உரைகள் கண்டிக்கப்படவேண்டியது எனக் கூறியதுடன் அவ்வாறு பிக்குமார்கள் பேசியிருக்கக் கூடாது எனக் கூறினார்.

## பொலிஸ் அதிகாரிகளுடன் சனாதிபதி சந்திப்பு சலுகைகள் பல தருவதாக வாக்குறுதி!

நாட்டின்பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக சனாதிபதி பொலிஸ் அதிகாரிகளுக்கு விளக்கமளித்துள்ளார். உள்துறை அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்றபின்னர் சனாதிபதி நேற்று முன்தினம் இலங்கைமுழுவதும் பணியாற்றும் 252 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஷ்டபொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்துள்ளார். இதன் போது பாதுகாப்பு அறிவுரைகளைத் தெரிவித்த அவர் பொலிஸ் அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு கல்வித் திட்டங்கள் என்பன செயற்படுத்தப்பட விருப்பதாக உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பில் சனாதிபதி உரையாற்றுகையில் நாட்டில் சீர்குலைந்துள்ள சட்டத்தை மீள நிலைநாட்டும் பணிகளில் பொலிசால் உச்சக்கட்ட பங்களிப்பை வழங்க வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களில் சட்டமும், ஒழுக்கமும் சீர் குலைந்துள்ளது. அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களும் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கும் நடவடிக்கைகளை வழங்கப்போகின்றேன்.

அரசியல் தலையீடு காரணமாக அதள பாதாழத்தில் வீழ்ந்த பொலிஸ் துறையை மீட்டெடுத்து அதனை உன்னத சேவையாகத் தரம் உயர்த்த வேண்டுமென அவா மேலும் கூறியுள்ளார். (32)

## குரங்குபாஞ்சான் முகாம் அகற்ற வேண்டும் சனாதிபதியிடம் தேசபிரேமி வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அதிகாரம் தற்போது கிடைத்திருப்பதால் சனாதிபதி குரங்கு பாஞ்சான் முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசபிரேமி இயக்கத்தில் கலந்து கொள்ளும் அங்கவீனப் படை வீரர்கள் சந்திரிகாவிடம் கோரியுள்ளனர்.

மேற்படி தேசபிரேமி இயக்கத்தின் அமைப்பாளரான லெப் சாந்த ஜயதிலக சனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பாதுகாப்பு தொடர்பான அதிகாரம் தங்களின் கைக்கு வந்ததையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆகவே தங்களுக்குத் தற்போது நாட்டில் பூரண அதிகாரம்கிடைக்கப் பெற்றுள்ளது. தற்போது நீங்கள் சரியான நடவடிக்கைகளில் இறங்கி முதலாவதாக குரங்கு பாஞ்சான் முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகவே எமது அமைப்பு நாட்டின் பாதுகாப்புக்காகவும் அனைத்து மக்களின் சார்பாகவும் கேட்டுக் கொள்வது குரங்கு பாஞ்சான் முகாமை உடன் அகற்ற வேண்டும். இதற்காக எமது பலத்தையும் நாம் வழங்குவோம்.

இவ்வாறு அக் கடிதம் கூறுகிறது.

## விடுதலைப் போராட்டம் சார்ந்த நிகழ்வுகளில் மாணவர்கள் பங்கேற்பைத் தடுக்க முயற்சி!

தமிழீழ விடுதலைப் போராட்டம் சார்ந்த நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்த வேண்டாமென யாழ்மாவட்ட இராணுவ தளபதி சரத் பொன்சேகா யாழ் கல்விவலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களுக்கு எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.கடந்த 9 ஆம் திகதி வலிகாமம்,வடமராட்சி, தெனமராட்சி,தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களைச் சந்தித்த போதே இவ் எச்சரிக்கையை விடுத்ததாகத் தெரிவிக் கப்படு கிறது.

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாள் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் இடம் பெறும் இவ் வேளையில் எச்சரிக்கை விடுத்திருப்பது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


## விளையாட்டுத்துறையில் ஊக்கமருந்துப் பாவனை தடைசெய்யும் அமைப்பில் தென்னாபிரிக்கா இணைவு

விளையாட்டுத் துறையில் ஊக்கமருந்துகளைப் பாவிப்பதைத் தடை செய்யும் I.A.T.A என்ற சர்வதேச அமைப்பில் இணையும் முதலாவது நாடு என்ற பெருமை தென்னாபிரிக்காவிற்குக் கிடைத்துள்ளது.

இது தொடர்பான சோதனைகளை நடத்துவதற்கும் துறை சார்ந்த கல்வியறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஏனைய நாடுகளுடன் ஒத்துழைத்துச் செயற்பட தென்னாபிரிக்கா இணங்கியுள்ளது. உலக ஊக்க மருந்தைத் தடை செய்யும் அமைப்புடன் இணைந்து பணியாற்றும் I.A.T.A இது தொடர்பான சோதனைகளை தரம் உயர்த்தி தடைகளை அறிமுகப்படுத்தும் முயற்சிகளை ஊக்குவிக்கின்றமை குறிப்பிடத் தக்கது.


## கங்குலி விளையாடுவார்

இன்று பெங்களூரில் நடைபெறும் T.V.S கிண்ண முக்கோண ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடும் இந்திய அணியில் அணித் தலைவர் கங்குலி விளையாடுவார். காயம் காரணமாக இத் தொடரில் 2 போட்டிகளில் விளையாட முடியாமல் போனமை பற்றி அவர் மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளார். இக்கட்டான நேரத்தில் தமது அணிக்கு உதவ முடியாமல் போவதையிட்டு அவர் கவலையடைந்துள்ளார்.இன்று நடைபெறும் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறுமாயின் இறுதிப் போட்டி பற்றி சிந்திக்கலாம்.



# தவளைத் தாக்குதல் வெற்றி விழாவின்போது...







## சனாதிபதி...

விடயம் பற்றி கலந்துரையாடிய பின்னர் ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திக்க சனாதிபதி திட்டமிட்டுள்ளார். என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் சனாதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் பற்றி பேச்சுக்கள் நடத்தும் எண்ணம் எதுவும் கிடையாது என்று கூறிய அமைச்சர் சனாதிபதி மூன்றுஅமைச்சுக்களைப் பொறுப்பேற்றதனால் நாட்டில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சமாதான முயற்சியில் வெற்றி காண்பதன் மூலமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்றார்.

நாடாளுமன்றில் ஐக்கிய தேசிய முன்னணி ரெும்பான்மை பலத்தை கொண்டிருக்கிறது. எனவே தற்சமயம் தேசிய அரசாங்கம் அவசியமில்லை என்பதே அரசாங்கத்தின் எண்ணமாகும் இந்த நிலையில் சனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களையும் மீள ஒப்படைக்க வேண்டும் இல்லையேல் சமாதான முன்னகர்வின் முழுப்பொறுப்பையும் சனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என இன்றைய சந்திப்பில் பிரதமர் கேட்கவிருப்பதாகவும் ஜீ.எல். பீரீஸ் தெரிவித்தார். இதற்கும் சனாதிபதி இணக்காவிட்டால் தேர்தலை சந்திக்க ஐக்கிய தேசிய கட்சி தயார் என்பதை பிரதமர் சனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைப்பதற்கு சனாதிபதிக்கு அதிகாரமில்லை. அரசியலமைப்பு தொடர்பில் நாடாளுமன்றததினை ஒத்திவைக்க முடியும். ஆனால் நீதிமன்ற கட்டளையை முன்கொண்டு தற்சமயம் நாடாளுமன்ற அமர்வை ஒத்திவைத் தமை செல்லுபடியாகாது' அரசியலமைப்பின் நான்காவது சரத்தின்படி நீதிமன்றத்தின் சரத்தின் சில விசேட அதிகாரங்களும் நாடாளுமன்றிற்கு உண்டு எனவே அந்த அதிகாரத்தை கொண்டு நாடாளுமன்ற அமர்வை மீண்டும் கூட்டுமாறு அரசாங்க மற்றும் ஆதரவு கட்சியின் 130 நடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரியுள்ளனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றிய அமைச்சர் திசாநாயக்க ஐதேமுன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொ. ஐ.முன்னணி அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார். பணம் மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் என்பன தம்முடன் இணைந்து கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு வழங்கவும் அந்தக்கட்சி முன் வந்துள்ளது. என்று கூறினார்.(32)

## ஏனைய...

டையும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

வரவு செலவுத் திட்டத்தை திட்டமிட்ட முறையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்காததினால் மக்களுக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருப்பதையும் சர்வதேச உதவி வழங்குகின்ற நிதியத்திலிருந்து உதவி கிடைக்காமல் போவுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் பாதுகாக்கப்பட வேண்டும். சமாதானத்தைப் பேணிக் காப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். ஏனைய பிரச்சினைகள் அதன பின்னர் பேசித் தீர்க்கப்படலாம் என்றும் வடக்கில் இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பிரச்சினைகளும் கிழக்கில் இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பிரச்சினைகளும் தனித் தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் கூறியுள்ளார். (32)

## புலிகளுடன்...

படுவது தடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலுக்குச் செல்லாமல் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு சனாதிபதி தீர்மானித்திருக்கிறார். பல ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவு வழங்குவார்கள். சனாதிபதிக்கெதிராக குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவரும் சாத்தியம் இல்லை தமிழ்,முஸ்லிம் கட்சிகள் இந்தப் பிரேரணையை ஆதரிக்கமாட்டாது.

எதிர்காலத்தில் தேர்தல் ஒன்றில் எமதுகட்சி நிச்சயம் வெற்றி பெறும் என நிச்சுபத்திரன மேலும் கூறியுள்ளார்.

## தனித்...

யாக முஸ்லிம் காங்கிரஸ் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு வழங்குவதற்கு நோர்வேயின் பிரதி வெளிவிகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையே பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் பூரண ஆதரவு வழங்கும் என்று ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாடுபிளவு...

ஆகியோர் எதிர்காலப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்று அது கூறுகிறது. இது தொடர்பாக மக்களின் நம்பிக்கைகளைப் பெறுவதும் அவசியமாகும். 2000ஆம் ஆண்டு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் அரசியல் யாப்பு சட்டமூல அடிப்படையில் இந்தப் பேச்சுக்கள் நடத்துவது உகந்தது என்று பொ. ஐ.முன்னணி நம்புகிறது. பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் சுபிட்சமான எதிர்காலத்திற்குமாக அரசியல் கட்சித்தலைவர்கள் பொதுமக்கள ஊடகங்கள் ஆகியன வேறுபாடுகளை மறந்து புத்திசாதுரியத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென பொ.ஐ.முன்னணிவேண்டுகோள் விடுத்துள்ளது.

## தவளைத்...

வித்தியாசமான படைத் தளம் இது கடற்படையினரின் கண்காணிப்பிலும் தரைப்படையினரின் கண்காணிப்பிலுமாக இருந்த கூட்டுப் படைத் தளமாக 2000க்கும் மேற்பட்ட படையினரையும், கனரக ஆயுதங்களையும் கொண்டிருந்த ஒரு மிகவும் பலமான படை முகாம். இந்த முகாமை அழிப்பதற்காக நாம் குறிப்பிட்ட போராளிகளுடன் தீரமிகு தாக்குதலை நடாத்தினோம். இந்தத் தாக்குதல் மூலம் 300 கடற்படையினரும், 800 தரைப் படையினரும் இந்த பூநகரி மண்ணில் அழிக்கப்பட்டனர்.

இந்தளத்தின் மீது எம்மால் தாக்குதல் நடத்தப்பட்டபோது முகாமின் முக்கிய மையப் பகுதிகளில் எல்லாம் எமது போராளிகள் ஊடுருவி நிலை எடுத்து முகாமின் உள்ளிருந்தே எதிரியை தாக்கி அழித்து எதிரியின் யுத்த டாங்கிகள், மோட்டர் பீரங்கிகள் உட்பட ஏராளமான ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றினோம். இவற்றைக் கொண்டே பின்னால் எதிரியின் பெரும் இராணுவ தளங்களை தகர்த்து சரித்திர வெற்றிகளைப் பெற்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வு முன்னதாக பூநகரி சங்குப்பிட்டி வீதியில் விடுதலைப்புலிகளால் இராணுவ ராங்கி தாக்கி அழிக்கப்பட்டஇடத்திலிருந்து பாண்ட்இசை அணிவகுப்புடன் ஊர்வலம் ஆரம்பமாகி வாடியடியை வந்தடைந்ததை அடுத்து பொதுச்சுடரினை மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல விதுஷா ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட தளபதி லக்ஸ்மன் ஏற்றினார் ஈகச் சுடரை மாவீரரின் பெற்றோர் இராசலிங்கம் பூநகரி பிரதேச காவல் துறைப்பொறுப்பாளர் நா. வதனகுமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மலர்வணக்கம் நடைபெற்றது.

அடுத்து பூநகரி தளம் வெற்றி கொள்ளப்பட்டதன் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கல்லுக்கான மலர்மாலையை புலிகளின்குரல் நிறுவனப் பொறுப்பாளர் தமிழன்பன் அணிவித்தார். தொடர்ந்து பூநகரி வெற்றி விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டு மற்றும் பொது அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற அணிக்கு கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை வெற்றிக் கேடயத்தை வழங்கிக்கௌரவித்தார். தொடர்ந்து கடற்புலிகளின் மன்னார். மாவட்ட தளபதி லக்ஸ்மன் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றோருக்கும் மன்னார். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் காதர் வலைபந்தாட்டத்தில் வெற்றி பெற்றோருக்கும் அரசியல்துறையை சேர்ந்த கந்தமான், பூநகரி பிரதேச பொறுப்பாளர் வேங்கை தமிழ் ஆகியோர் பரிசுகளையும் கேடயங்களையும் பதக்கங்களையும் வழங்கி கௌரவித்தனர்.

தொடர்ந்து தமிழீழ மகளீர் இசைக்குழுவினரின் இன்னிசை கானங்களும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேற்படி நிகழ்வுகள் அதிபர் தி.சிவனாதன் தலைமையில் நடைபெற்றன. (லோ)

## சமாதானத்தில்..

மூர்த்தி, ஜீ. ஜீ. பொன்னம்பலம், என். ரவிராஜ், செல்வம் அடைக்கலநாதன், ராஜாகுகனேஸ்வரன், அ. சந்திரநேரு, க. துரைரெட்ணசிங்கம், சுரேஷ் பிரேமசந்திரன், ந. குமரகுருபரம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

கனடா, அவுஸ்திரேலியா நாடுகளில் உள்ள சாதாரண சமஷ்டி அரசமைப்புக்களில் காணப்படும் அம்சங்களே விடுதலைப்புலிகளின் யோசனைத் திட்டத்திலும் அடங்கியுள்ளன. இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக முன்னர் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளிலும் பல அதிகாரங்களை வழங்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறான யோசனைகளே விடுதலைப்புலிகளின் தற்போதைய யோசனைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆகவே, விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனறு கூட்டமைப்புத் தூதுக்குழு நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சரிடம் வலியுறுத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

"பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பும் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பும் ஒருவரிடமே இருக்க வேண்டும். இப்பொறுப்புக்கள் ஒன்றோடு ஒன்றிப் பின்னிப்பிணைந்தவையாகும். இவ்விரண்டு பொறுப்புக்களும் இரண்டு கட்சிகளிடம் பிரிக்கப்பட்டு வழங்கப்படுவது மோதலில்தான் முடிவடையும். எனவே, சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் ஒரு கட்சியிடம்தான் பாதுகாப்பு ஒழுங்குகள் தொடர்பான அதிகாரங்கள் இருக்க வேண்டும்" என்று கூட்டமைப்புத் தூதுக்குழு உறுதிபட நோர்வே அரச குழுவினிடம் தெரிவித்தாக குழுவின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். இரு பொறுப்புக்களும் இரு கட்சிகளிடம் இருப்பது நிச்சயமாக சமாதான முயற்சியைக் குழப்புவதாகவே அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டதாக சம்பந்தன் கூறினார்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற ஆர்வம் சனாதிபதிக்கு எப்போதுமே இருந்திருக்கவில்லை என்பதையும் கூட்டமைப்புத் தூதுக்குழு நோர்வே குழுவிற்குத் தெரியப்படுத்தியது.

2000 டிசம்பரில் விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர். விடுதலைப் புலிகள் அப்போது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாக இருக்கின்றனர் என்று ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்த பிரகடனத்தின் மூலம் விடுத்த சமிக்ஞையை சனாதிபதி புறக்கணித்தார். விடுதலைப்புலிகளுக்கு எதிரான 'அக்கினிச் சுவாலை' என்ற பெயரிலான இராணுவத் தாக்குதலை சனாதிபதி தலைமையிலான அரசு ஆரம்பித்தது என்பதைக் கூட்டமைப்புத் தூதுக்குழுவினர் பேச்சுவார்த்தையின் போது தெரியப்படுத்தினர். சமாதான முயற்சியில் சனாதிபதி விசுவாசமாக ஈடுபடவில்லை என்பதையும் சமாதானத்தில் அக்கறை காட்டுவதாக நடந்தாலும் இராணுவ முயற்சிகளையும் அவர் மேற்கொண்டு வந்துள்ளார் என்பதையும் இச்சம்பவங்கள் காட்டுவதாகவும் கூட்டமைப்புத் தூதுக்குழுவினர் நோர்வே பிரதி அமைச்சர் குழுவிடம் தெரிவித்தனர். எனவே, உண்மையாக சமாதானத்தை முன்னெடுக்கும் தரப்பிடம்தான் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொறுப்புக்களும் இருக்க வேண்டும் என்பதையே இவை வலியுறுத்துவதாகவும் கூட்டமைப்புத் தூதுக்குழுவினர் வற்புறுத்தினர்.

"முஸ்லிம் மக்களுடைய அனைத்து உரிமைகளும், அபிலாசைகளும் வழங்கும் தீர்வே காணப்பட வேண்டும். அரசமைப்பு ரீதியான உத்தரவாதம் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்'' என கூட்டமைப்பு ஏற்றுக் கொள்கிறது என்று கூட்டமைப்புத் தூதுக்குழு நோர்வேக் குழுவிடம் தெரிவித்தது.

"ஆனால், யுத்தத்தில் நேரடியாக சம்பந்தப்பட்ட சிங்கள மக்களும் தமிழ் மக்களும் தான் பேச்சுவார்த்தையில் இரு தரப்பாக ஈடுபட வேண்டும். சிங்கள மக்களின் சார்பில் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுகின்றது. தமிழ் மக்கள் சார்பில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுகின்றார்கள். இந்த நிலைப்பாடு குலையக்கூடாது'' என்று கூட்டமைப்புத்தூதுக்குழுவினர் கருத்து வெளியிட்டனர்.

52 ஆண்டுகளாக தமிழ் மக்கள் அழிக்கப்பட்டார்கள். எவ்வளவோ அர்ப்பணிப்புக்கள், தியாகங்களுக்கு மத்தியில் இராணுவ ரீதியான எதிர்ப்புக்களை விடுதலைப்புலிகள் மேற்கொண்டதன் காரணமாக இன்றைய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தியாகங்கள், அர்ப்பணிப்புக்களைச் சாதாரணமாகச் கருதிவிட முடியாது. அவர்களின் இத்தியாகங்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்று கூட்டமைப்புத் தூதுக்குழு நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சருக்கு எடுத்துக் கூறியது.

சமாதானப் பேச்சுவார்த்தையை மூன்று தரப்பாக நடத்த முடியாது. யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரும் பங்கு கொள்வதாகவே சமாதானப் பேச்சுவார்த்தை அமைய வேண்டும். மூன்று தரப்பாக பேச்சுவார்த்தை நடத்தப்படும்போது ஒரு தரப்பு வெளிநடப்புச் செய்தால், சமாதான முயற்சியின் நிலை எவ்வாறாக அமையும் என்பதை சிந்திக்க வேண்டும் என்றும் கூட்டமைப்புத் தூதுக்குழு கேட்டுக் கொண்டது.

இந்திய பிரஜா உரிமைச் சட்டம், தனிச் சிங்களச் சட்டம், சிங்களக் குடியேற்றம்- இவற்றிற்கு எதிராக தமிழ் மக்கள் தான் போராடினார்கள். பண்டா-செல்வா உடன்படிக்கை, டட்லி-செல்வா உடன்படிக்கை ஆகிய அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராகவும் அதனை நிறுத்தும் நோககுடனும் தமிழர் தரப்பு சிங்கள அரசுகளுடன் செய்து கொண்டவையாகும். முஸ்லிம் மக்களின் ஆதரவும் இவற்றுக்குக்கிடைக்கவில்லை என்றும் கூட்டமைப்புத் தூதுக்குழு நோர்வேக் குழுவிடம் தெரிவித்தது என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் கூறின. (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.